Circular: GR/8/2013

# ஆயர் கடிதம்

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையர்களே, அருள்சகோதரிகளே, அன்பு சகோதரர் சகோதரிகளே,

நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக.

2013 பிப்பிரவரி 11 ஆம் தேதி சாம்பல் பூசிக்கொண்டு நாம் தவக்காலத்தைத் ஆரம்பிக்கிறோம். நாம் வாழும் இந்த அவசர உலகில் நமது வாழ்க்கையைக் குறித்து ஆழமாக அலசவும், நாம் எங்ஙனம் வாழ்கிறோம் என்பதைக் குறித்து சிந்தித்துப் பார்க்கவும் இது ஏற்ற காலம். மேலும், நாம் செய்யத் தவறிய காரியங்களைக் குறித்து வருந்தி இறைவனிடம் மன்னிப்புக் கேட்கவும் இதுவே ஏற்றக் காலம். அத்தோடு, செபத்திற்காக அதிக நேரம் செலவிடவும், ஏழைகளுக்கு உதவி செய்யவும் இது உகந்த காலம். கடவுளோடு நாம் கொண்டுள்ள விசுவாசத்தில் வளரவும் ஆழமாக வேரூன்றவும், திருமுழுக்கின் பலன்களை ஏராளமாக விளைவிக்கவும் ஏற்ற காலம் இதுவே. கிறிஸ்தவ வாழ்வின் உயிர்நாடியான பிறருதவிப் பணிகளைக் குறித்து சிந்தித்து செயல்படுவதற்கும் இக்காலமே சிறந்தது. எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தில் வரும் இறைவார்த்தையை நாம் மனதில் பதிய வைப்போம்: ''அன்பு செலுத்தவும் நற்செயல்கள் புரியவும் ஒருவரையொருவர் தூண்டியெழுப்பக் கருத்தாயிருப்போமாக'' (எபிரேயர் 10, 24).

பின்குறிப்பிடப்படுகின்ற காரியங்கள் இத்தவக்காலத்தை இறையனுபவம் மிக்கதாக்கவும், செப அனுவத்தை நமக்குத் தரவும் உதவியாக இருக்கும். திருச்சபைக்கும் நமக்கும் கடவுள் தந்திருக்கின்ற அற்புதமான நாள்களே இந்நோன்பு காலத்தின் நாள்கள். காரணம், **இது கடவுளுக்கு ஏற்ற காலம், நம்மைக் குறித்து மதிப்பீடு செய்தவற்கான காலம், மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளும் காலம், புதிய வாழ்க்கையை நோக்கிய பயணத்தின் காலம்.**

1. **இது கடவுளிக்கு ஏற்ற காலம்:** நாற்பது நாள்களை உள்ளடக்கிய காலம்.
   - வெள்ளப்பெருக்கத்தின் வேளையில் நோவா பெட்டகத்தினுள் நாற்பது நாள்கள் இருந்தார்
   - பாலைநிலத்தைக் கடக்க இஸ்ரயேல் மக்களுக்கு நாற்பது ஆண்டுகள் ஆயிற்று.
   - சீனாய் மலையில் மோசே நாற்பது நாள்கள் செலவிட்டார்
   - ஒரேபு மலையில் எலியா நாற்பது நாள்கள் பயணம் மேற்கொண்டார்.
   - நினிவே மக்கள் மனமாற்றமடைய நாற்பது நாள்கள் எடுத்துக் கொண்டனர்
   - நாற்பது நாள்கள் இயேசு பாலைநிலத்தில் செலவிட்டார்.
   - நாற்பது எனும் போது இங்கே நாற்பது என்னும் எண் அல்ல முக்கியம் மாறாக, முக்கியமான நிகழ்வுகளுக்கு முன்னால் முடிவு எடுப்பதற்காக செலவிடும் நாட்களே அவை. நமது சீரோ மலபார்த் திருச்சபையைப் பொறுத்தவரைக்கும் நாம் இதை ஐம்பது நாட்களாக அனுசரிக்கிறோம். சாம்பல் திங்கள் தொடங்கி நோன்பு காலத்தில் வருகின்ற ஏழு ஞாயிற்றுக்கிழமைகளையும் நாம் நோன்பு நாட்களாகக் கொண்டு அனுசரிக்கிறோம். அதனாலேயே நமது நோன்பு ஐம்பது நாட்களாக உள்ளன.

**இது இறை ஆற்றலின் காலம்:** கடவுளின் பராமரிப்பையும் அன்பையும் இஸ்ரயேல் மக்கள் பாலைநிலத்தில் அனுபவித்தார்கள். அதை அவர்கள் அனுபவிப்பதற்கு முன்னால் ஆண்டவர் அவர்களுக்காக ஏற்பாடு செய்திருந்த துன்பங்களுக்கு உடன்பட்டார்கள், அதன்பிறகு வெற்றி பெறுகிறார்கள். துன்பங்கள் வழியாக நாம் தூய்மைப்படுத்தப்பட்டு கடவுள் தரும் பரிசைப் பெற தகுதியுடையவர்களாக உருமாற்றப்படுகிறோம்.

> ''உங்கள் கடவுளாகிய ஆண்டவர் பாலைநிலத்தில் உங்களைக் கூட்டிச் சென்ற எல்லா வழிகளையும் நினைவில் கொள்ளுங்கள். அதன்மூலமே அவர் உங்களை எளியவராக்கினார். அவர்தம் கட்டளைகளை நீங்கள் கடைப்பிடிப்பீர்களோ மாட்டீர்களோ என நீங்கள் உங்கள் உள்ளச்சிந்தனையை அறிந்து கொள்ளவும் சோதித்தார்... உங்களுக்குப் பசியைத் தந்தார். ஆனால், மனிதர் அப்பத்தினால்

மட்டுமன்று, மாறாக, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் உயிர்வாழ்கின்றார் என்று நீங்கள் தெரிந்து கொள்ளுமாறு, நீங்களும் உங்கள் மூதாதையரும் அறிந்திராத மன்னாவினால் உங்களை உண்பித்தார்'' (இணைச்சட்டம் 8: 2–3).

**அருளின் காலம்:** கடவுள் அளிக்கும் மீட்பை பெற்றுக் கொள்வதற்கான காலம் தவக்காலம். கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்தல் தூய பவுல் பின்வருமாறு கூறுகிறார்.

''கடவுளோடு ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவின் சார்பில் நாங்கள் மன்றாடுகிறோம். ''தகுந்த வேளையில் நான் உமக்குப் பதிலளித்தேன்; விடுதலை நாளில் உமக்குத் துணையாய் இருந்தேன்'' எனக் கடவுள் கூறுகிறார். இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்!'' (2கொரி 5: 20–6: 2).

தகுந்த தயாரிப்புடன் நல்ல பாவசங்கீர்த்தனம் பெற வேண்டும். அதுவே மீட்பு எனவும், காலம் தாழ்த்தாது செயல்படவும் வலியுறுத்தப்படுகிறது.

**விடுதலையின் காலம்:** ஆண்டவராகிய கடவுள் விரும்பும் நோன்பைக் குறித்து அவரே பின்வருமாறு கூறுகிறார்.

''கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும், நுகத்தின் பிணையல்களை அறுப்பதும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும், எவ்வகை நுகத்தையும் உடைப்பதும் அன்றோ நான் தேர்ந்துகொள்ளும் நோன்பு! பசித்தோர்க்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும் தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும், உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும் உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு! அப்பொழுது உன் ஒளி விடியல் போல் எழும்; விரைவில் உனக்கு நலமான வாழ்வு துளிர்க்கும்; …ஆண்டவரின் மாட்சி உனக்கு பின்சென்று காக்கும்.'' (எசாயா 58: 6–8).

பிறரை நேசிக்கவும், நம்மை பிணைத்து வைத்திருக்கும் சகோதரனுக்கு எதிரான பாவங்களை அறுத்து எறியவும் கடவுள் கூறுகிறார்.

**வாழ்வை மறு ஆய்வுக்கு உட்படுத்தும் காலம்**

**ஒப்புரவின் அவசியம்:** நமது தீய வழிகளை விட்டு விலகவும் கடவுளிடம் திரும்புவதற்கும் ஏற்ற காலம் இத்தவக்காலம்.

''சில நாள்களுக்குள் இளைய மகன் எல்லாவற்றையும் திரட்டிக் கொண்டு, தொலை நாட்டிற்கு நெடும் பயணம் மேற்கொண்டார்; அங்கு தாறுமாறாக வாழ்ந்து தம் சொத்தையும் பாழாக்கினார்.. நாடு முழுவதும் கொடிய பஞ்சம் ஏற்பட்டது… எனவே அந்நாட்டுக் குடிமக்களுள் ஒருவரிடம் அண்டிப் பிழைக்கச் சென்றார். அவர் அவரைப் பன்றி மேய்க்க அனுப்பினார்… அவர் அறிவுத் தெளிந்தவராய், என் தந்தையின் கூலியாள்களுக்குத் தேவைக்கு மிகுதியான உணவு இருக்க, நான் இங்கு பசியால் சாகிறேனே! நான் புறப்பட்டு என் தந்தையிடம் போய், அப்பா கடவுளுக்கும் உமக்கும் எதராக நான் பாவம் செய்தேன்…'' (லூக்கா 15: 13–19).

நாம் விட்டு விலகிச் சென்ற நன்மைகளை வாழ்க்கையில் திரும்ப கொண்டு வரவும் கடவுளை தந்தையாக ஏற்று வாழ்வைப் புதுப்பிக்கவும் ஏற்ற காலம் இதுவே.

**நமது குறைகளைக் குறித்து சுய அறிவு பெறுவோம்:**

''ஆண்டவர் காயினிடம், நீ ஏன் சினமுற்றிருக்கிறாய்? உன் முகம் வாடி இருப்பது ஏன்? நீ நல்லது செய்தால் உயர்வடைவாய் அல்லவா? நீ நல்லது செய்யாவிட்டால், பாவம் உன்மேல் வேட்கை கொண்டு உன் வாயிலில் படுத்திருக்கும். நீ அதை அடக்கி ஆள வேண்டும்'' என்றார்'' (தொடக்கநூல் 4: 6–7).

நமக்குள்ளே ஏற்பட்டிருக்கும் கோபம், வெறுப்பு, பொறாமை... போன்ற தீயவற்றிற்கான காரணங்கள் நமக்குள் ஒளிந்திருக்கின்றன. அவற்றைக் குறித்து சுயஅறிவுடையவர்களாக மாறுவோம்.

**கடவுளின் துணை தேவை**

அன்றாட வாழ்வின் நாம் மேற்கொள்ளும் முயற்சிகள் ஒவ்வொன்றிலும் கடவுள் துணையை நாடுவதற்கு ஏற்ற காலம் இது. கடவுளை சார்ந்து அவரோடு இணைந்து வாழ்வதற்கு உகந்த காலம் இதுவே.

> ‘‘ஆண்டவரே நான் மன்றாடும் போது என் குரலைக் கேட்டருளும்; என் மீது இரக்கம் கொண்டு எனக்குப் பதிலளித்தருளும். புறப்படு, அவரது முகத்தை நாடு என்றது என் உள்ளம்; ஆண்டவரே, உமது முகத்தையே நாடுவேன்’’ (திருப்பாடல் 27: 8–9).

**வாழ்வை மாற்றியமைக்கும் ஆற்றல் நமக்குள்ளே இருக்கிறது என்ற உறுதியான மனநிலை**

> ‘‘அந்நேரத்தில் சீடர்கள் இயேசுவை அணுகி, ‘‘விண்ணரசில் மிகப் பெரியவர் யார்? என்று கேட்டார்கள். அவர் ஒரு சிறு பிள்ளையை அழைத்து அவர்கள் நடுவில் நிறுத்தி, பின்வருமாறு கூறினார்: நீங்கள் மனந்திரும்பிச் சிறுபிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் விண்ணரசில் புகமாட்டீர்கள்... இந்தச் சிறுபிள்ளையைப்போலத் தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப் பெரியவர்’’ (மத்தேயு 18: 1–5).

குழந்தைகளைப் போன்று உறுதியான, ஐயமற்ற மனநிலை நமக்கு வேண்டும். கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட நாம் ஆற்றல் உடையவர்கள்.

**2. மாற்றத்திற்கு ஏற்ற காலம்**

**ஒப்புரவடைய செய்ய வேண்டியவை:**

*கடவுளோடு ஒப்புரவடைய =* **(துணைநிற்பது) செபம்.** இது ஒரு அமைதியான நிலை. அமைதியாக இருந்தவாறு இறைவனின் குரலுக்கு செவிமடுத்தல். இறைவார்த்தைகளை அமைதியாக வாசித்து அதற்கு ஏற்ற பதிலளித்தல்.

> ‘‘மேலும் நான் உங்களுக்குச் சொல்கிறேன்: கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெனில் கேட்போர் எல்லாரும் பெற்றுக்கொள்கின்றனர்; தேடுவோர் கண்டடைகின்றனர்; தட்டுவோருக்குத் திறக்கப்படும்.’’ **(லூக்கா 11: 9–10).**

நமது சுகங்களுக்காக மட்டுமல்ல நாம் செபிக்க வேண்டியது. இறைத்திருவுளம் அறிந்திட செபிக்க வேண்டும்.

*நமக்கு அடுத்திருப்போருடன்* = **உதவுதல்.** தேவையில் உழல்வோரே நமக்கு அடுத்திருப்பவர் என்பதை இயேசு நமக்கு கூறியுள்ளார். தவக்கால ஒறுத்தல் முயற்சிகள், தேவையில் இருப்போருக்கும் நம்மை விட பின்தங்கிய இருப்போருக்கும் நமது உணவை (நமக்கு இருப்பதை) பகிர்ந்து கொள்ளுகின்ற காலம்.

> ‘‘என் உடமையை எல்லாம் நான் வாரி வழங்கினாலும் என் உடலையே சுட்டெரிப்பதற்கென ஒப்புவித்தாலும் என்னிடம் அன்பு இல்லையேல் எனக்குப் பயன் ஒன்றுமில்லை. அன்பு பொறுமையுள்ளது; நன்மை செய்யும்; ... உண்மையில் அது மகிழும். அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்; அனைத்தையும் நம்பும்; அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும்; அனைத்திலும் மனஉறுதியாய் இருக்கும் (1கொரிந்தியர் 13: 3–7).

அன்பை பகிர்தலை விட சிறந்தது எதுவும் இருத்தல் இயலாது. அன்பு இருந்தால் நாம் பிறரை நம்மவராய் பார்ப்போம். நமது இல்லாமையிலும் உதவுவோம்.

*நம்மோடு நாம் ஒப்புரவாவோம்* = **குறையுணவு.** இது நாம் பொருள்களின் மீது (செல்வம்) நம்பிக்கைக் கொள்ளாமல் தூய ஆவியின் ஆற்றலில் நம்பிக்கைக் கொள்ள உதவுகிறது. இது நம்மை மீட்புக்கு இட்டுச் செல்கிறது.

“நான் உங்களுக்குச் சொல்கிறேன், உயிர்வாழ எதை உண்பது என்றோ, உடலுக்கு எதை உடுத்துவது என்றோ கவலை கொள்ளாதீர். நீங்கள் அவருடைய ஆட்சியை நாடுங்கள்; அப்பொழுது இவை உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்.” **(லூக்கா 12: 23,29,31).**

**இத்தவக்காலத்தில் நான் என்ன செய்யலாம்?**

*ஏழைகளுக்கு உதவ ஏற்ற காலமே நோன்பு காலம்.* இத்தவக்காலத்தில் உங்கள் இல்லங்களில் வைக்க உண்டியல் ஒன்று கொடுக்கப்படும். அதிலிருந்து கிடைக்கும் தொகையானது, மாற்றுத்திறனாளிகளாக உள்ள உடல் ஊனமுற்ற பிள்ளைகளுக்குக்காக செயல்படும் நித்திரவிளையில் உள்ள கருணை இல்லத்திற்கு கொடுக்கப்படும்.

தவக்காலத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை எடுக்கப்படும் காணிக்கையானது, தக்கலை மறைமாவட்டத்தில் உதவி நிதிக்காக எடுக்கப்படும். ஏழை எளியவர்களுக்காக சேகரிக்கும் இவ்வுதவித் தொகைக்காக நீங்கள் தாராள மனது காட்ட வேண்டும் என்றும் அன்புடன் கேட்கிறேன்.

**மேலும் நீங்கள் அறிய..**

வருகின்ற 16 ஆம் தேதி தக்கலை மறைமாவட்டத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த மூன்றாம் அருள்பணிப் பேரவையானது புதிய ஆயரின் தலைமையில் கூடுகிறது. மறைமாவட்டத்தின் வளர்ச்சிக்கான சில முக்கிய காரியங்கள் விவாதிக்கப்பட இருக்கின்றன. உறுப்பினர்களாக உள்ளவர்கள் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இதன் வெற்றிக்காக இறைமக்கள் அனைவரும் செபிக்க வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வருகின்ற தவக்காலம் பயன்மிக்கதாக மாறுவதாக. கடவுளோடு நெருங்கவும் அவரைப் பின்செல்லவும் இத்தவக்காலம் பேருதவியாக அமையட்டும் என இறைவனை வேண்டுகிறேன்.

ஈசோவில் அன்புடன்

தக்கலை
**08.02.2013**

மார் ஜார்ஜ் இராஜேந்திரன்
(தக்கலை மறைமாவட்டம்)

---

இச்சுற்றுமடலை **2013** பிப்ரவரி **10** ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கிடையே வாசிக்கவும்.